செ.வெ.எண்: 546 நாள்: 21.08.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தின் காவிரி பாசனப்பகுதிகளில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை சிறப்பு கண்காணிப்பு அலுவலர் திருமதி.சிரேயாசிங்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தின் காவிரி பாசனப்பகுதிகளில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை இன்று (21.08.2019) கால்வாய்கள் தூர்வாரும் பணிக்கான சிறப்பு கண்காணிப்பு அலுவலர் திருமதி.சிரேயாசிங்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் கால்வாய்கள் தூர்வாரும் பணிக்கான சிறப்பு கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர் ஆதாரங்களை சீரமைத்து அதன் மூலம் மழைநீரை சேமித்து நிலத்தடி நீரை மேம்படுத்தவும், நீர் பயன்பாட்டை முறையாக ஒழுங்கு படுத்தவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நீர்நிலைகளின் வரத்து கால்வாய்களை சீரமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இன்றையதினம் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி மற்றும் கந்தர்வக்கோட்டை ஆகிய வட்டங்களில் நரசிங்க காவிரி வடிகால்வாரி 6.80 கி.மீ நீளத்திற்கும், மகாராஜபுரம் வடிகால்வாரி 3 கி.மீ நீளத்திற்கும் துார் வாரும் பணிகள் நடைபெற்று வருவதையும், இடையாத்தி மங்களம் கண்மாய், சிறுகாசாவயல் கண்மாய் ஆகியவற்றின் உபரி நீர் வாய்க்கால்களிலும், வெளிவயல் கண்மாய், ராவுத்தன் வயல் கண்மாய், சாத்தக்குடி கண்மாய் ஆகியவற்றின் வரத்து வாய்க்கால்களிலும் 13.84 கி.மீ நீளத்திற்கு துார் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது வரத்து வாரிகள் தூர்வாரும் பணிகளை சரியான அளவுகளில் மேற்கொண்டு பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு தூர்வாரும் பணிக்கான சிறப்பு கண்காணிப்பு அலுவலர் திருமதி.சிரேயாசிங்,இ.ஆ.ப., அவர்கள் அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**